# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 418/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | திரு. முருகன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of August 2026.

நான் தற்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.01.2018 ஆம் தேதி 17.30 மணிக்கு இரண்டாம்நிலை காவலர் லெட்சுமிநாராயணன் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது மூலைக்கரைப்பட்டியைச்சேர்ந்த பொன்னையா தேவர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப குற்ற எண். 6/2018 இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 506(2) என்ற வழக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனு **அ.சா.ஆ.2** ஆகும். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.08.14 17:13:25 +0530

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் வினுக்குமார் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். அவர் விசாரணை நகலை எடுத்துகொண்டு 14.01.2018 ஆம் தேதி 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் மணிகண்டன், சுடலைக்கண்ணு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

சாட்சிகள் பொன்னையாதேவர், பேச்சியம்மாள், ராமசுப்பு, கந்தசாமி, பார்வை மகஜர் சாட்சிகள் மணிகண்டன், சுடலைக்கண்ணு, முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த லெட்சுமணநாராயணன் ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளார்.

வாதிக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் டென்னி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வாதி சிகிச்சையில் இருக்கும்போதே தன்னிச்சையாக மருத்துவமனையிலிருந்து சென்றதால் அவருக்கு காயசான்றிதழ் வழங்கவில்லை. விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆகும்.

எதிரிகளை தேடிவந்தநிலையில் வழக்கின் எதிரிகளான சண்முகம் மற்றும் சிவன் ஆகியோர்களை 15.01.2018 ம் தேதி 14.00 மூலைக்கரைப்பட்டி ஈஸ்வரன் அம்மன் கோவில் தெருவில் உள்ள சிவன் என்பவரது வீட்டில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கின் மற்ற எதிரிகளான அன்னம், லெட்சுமணன், மாரித்தாய் ஆகியோர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பின் வெளியே சென்றுள்ளார்.

புகார் மனுவின் அடிப்படையிலும் புலன் விசாரணையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 506(2) ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN
Date: 2026.08.14 17:13:36 +0530

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் எழுதாத வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கிக்கொண்டு புகார் என்னால் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சொன்ன நாள், இடம், விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.08.14 17:13:39 +0530